# யேர்மனி தமிழ்க் கல்விச் சேவை
## Tamilischer Bildungsverein Deutschland

பொதுப் பரீட்சை - 2018 / 2019
தமிழ்மொழி

ஆண்டு: 8 நேரம்: 3.00
சுட்டெண் .......................

பகுதி 1

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களைப் பூரணப்படுத்துவதற்கு பின்வரும் சொற்களில் மிகவும் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்க.

செவி, பிரதானமான, கூட்டுவாழ்க்கை, ஊக்கத்தோடும், நாடகசாலை.

அ) புரூஸ் சிலந்திப்பூச்சியை நினைத்துக்கொண்டே உறுதியோடும் ......................................... மறைவிடத்தைவிட்டு வெளியே வந்தார்.
ஆ) நாட்டார் பாடல்கள் பெரும்பாலும் ................................................. முறையைப் பிரதிபலிக்கிறது.
இ) பரிசளிப்பு விழா என்பது கல்லூரியின் மிகப் ................................................. ஒரு விழாவாகும்.
ஈ) இந்த உலகம் ஒரு ................................................ என்று ஷேக்ஸ்பியர் முதலிய அறிஞர்கள் கூறியுள்ளார்கள்.
உ) மனிதனுடைய ................................................ ஒழுங்கான நயமான ஒலியைக் கேட்க விரும்புகிறது.

2) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களைப் பூரணப்படுத்துவதற்கு அடைப்புக் குறிக்குள் உள்ள மிகவும் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக.

அ) உயிர்களின் சமநிலை குலைந்தால் (வானத்தின், சூரியனின், இயற்கையின், செயற்கையின்) சமநிலை குலைந்து பூமியே அழிந்துவிடும்.
ஆ) பேராசிரியர் உவைஸ் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் (கலாநிதி, முதுகலைமாணி, கலைமாணி, இளங்கலைமாணி)ப் பட்டத்தைப் பெற்றார்.
இ) உதயகுமாரனுக்குப் பயந்து காயசண்டிகை உருவிலிருந்த (மாதவி, மணிமேகலை, சீதை, கைகேகி) சிறைச்சாலையில் உணவளித்தாள்.
ஈ) அவரவர்களுக்கு எதில் (வெற்றியும், பழக்கமும், வேகமும், விவேகமும்) திறமையும் உண்டோ, அதை மட்டும் செய்யுங்கள் என்று தகப்பனார் புத்திமதி சொன்னார்.
உ) விமான அறையின் சுவர்களில் எங்கும் எண்ணிறைந்த (தறிகள், இணைகள், பொறிகள், கணைகள்) நிறைந்திருக்கும்.

3) மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக.

அ) மெய்யெழுத்துக்களின் எண்ணிக்கை (30, 247, 12, 18)
ஆ) குளிர்காலத்தில் பறவைகள் சூடான இடத்தைத் தேடிச் செல்லும். பறவைகள் என்பது (காரணப்பெயர், இடுகுறிப்பெயர், காரண இடுகுறிப்பெயர், தொழிற்பெயர்) ஆகும்.
இ) பாடசாலை மாணவருக்கு அடக்கம் மிகவும் தேவை. இதில் வரும் வேற்றுமை (முதலாம், நான்காம், ஐந்தாம், ஆறாம்) வேற்றுமையாகும்.
ஈ) அம்மா எனக்கு அடிக்கடி கடிதம் எழுதுகிறாள். எழுதுகிறாள் என்பது (வினையெச்சம், பெயரெச்சம், முற்றுவினை, குறிப்புவினை) ஆகும்.
உ) ஓடிய மாணவன் கால் தடக்கி விழே விழுந்தான். இதில் ஓடிய என்னும் சொல் (வினையெச்சம், பெயரெச்சம், தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று)
ஊ) கோயில் மணியோசை கேட்டது. இங்கு மணியோசை என்ற சொற்புணர்ச்சி (உயிர்முன் உயிர், உயிர்முன் மெய், மெய்முன் உயிர், மெய்முன் மெய்) புணர்ச்சியாகும்.
எ) சுமதி கவனத்துடன் படித்தாள் எனினும் அவள் பரீட்சையில் சித்தியடையவில்லை. இதில் எனினும் என்பது (பெயரடை, வினையடை, இணைப்பிடை, அடைமொழி)ச் சொல்லாகும்.
ஏ) நீங்கள் பல்லாண்டு காலம் வாழ்க. இவ்வாக்கியம் (ஏவல்வினை, செய்வினை, செயப்பாட்டுவினை, வியங்கோள்வினை) வாக்கியமாகும்.
ஐ. பைரவி ஆத்திரமடைந்து அவ்விடத்தைவிட்டு விரைவாகச் சென்றாள். விரைவாக என்னும் சொல் (பெயரடை, வினையடை, வினைமுற்று, பெயர்)ச் சொல்லாகும்.
ஒ) வடமொழிக் கலப்பினால் தமிழில் புகுந்த கிரந்த எழுத்துக்களில் ஒன்று (ப, மா, ஸ, த)

4) பின்வரும் சொற்களின் எதிர்க்கருத்தை எழுதுக.

அ) அழகு ..........................................................
ஆ) ஞாலம் ..........................................................
இ) ஐயம் ..........................................................
ஈ) கனிவு ..........................................................
உ) சேய் ..........................................................

5) பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிவு செய்க.

அ) ஆந்தை அலறும் அதுபோல் பாம்பு (பிளிறும், கதறும், சீறும், உறுமும்)
ஆ) "குசினி" என்ற சொல் (ஒல்லாந்து, பிரெஞ்சு, அரபு, ஆங்கில) மொழிச் சொல்லாகும்.
இ) கூடையில் கிடந்த பூக்கள் (கடுகடு, கமகம, கணகண, தகதக) என நறுமணம் வீசின.
ஈ) சோளப்பொரி போல ஆகாயத்தில் நட்சத்திரங்கள் மின்னின. இவ்வாக்கியத்தில் வந்துள்ள உவமானம் (சோளப்பொரி, ஆகாயம், நட்சத்திரங்கள், மின்னின)
உ) நாம் பொதுச்சொத்துக்களை கண்ணுங்கருத்துமாய் பாதுகாத்தல் வேண்டும். கண்ணும் கருத்துமாய் என்பது (இணைமொழி, அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி, தொடர்மொழி)

6) பின்வரும் சொற்களைச் சேர்த்தெழுதுக.

அ) கடல் + அலை ..........................................................

ஆ) அன்பு + உள்ளம் ..........................................................

இ) நீலம் + வானம் ..........................................................

ஈ) கல் + வீடு ..........................................................

உ) நாடு + பற்று ..........................................................

7) பின்வரும் சொற்களை இணைத்து வாக்கியம் எழுதுக.

அ) அன்பு: ..........................................................................................................................

..........................................................................................................................

ஆ) கல்வி: ..........................................................................................................................

..........................................................................................................................

இ) தமிழ்மொழி: ..........................................................................................................................

..........................................................................................................................

ஈ) தொழில்: ..........................................................................................................................

..........................................................................................................................

உ) தாய்நாடு: ..........................................................................................................................

..........................................................................................................................

# யேர்மனி தமிழ்க் கல்விச் சேவை
## Tamilischer Bildungsverein Deutschland

பொதுப் பரீட்சை - 2018 / 2019
தமிழ்மொழி

ஆண்டு: 8

பகுதி 2

முதலாவது வினாவுக்கும் ஏனைய இரண்டு வினாக்களுக்குமாக மூன்று வினாக்களுக்கு விடை தருக.

1) பின்வருவனவற்றுள் ஒன்றைப் பற்றி 125 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக.

அ) நீர் (தண்ணீர்)
ஆ) உயிர் இரக்கம்
இ) பறவைகளின் இசைவாக்கம்
ஈ) தமிழ்மொழி
உ) வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும்

2) உமது பாடப்புத்தகத்தில் உள்ள பாடங்களில் உமக்கு விருப்பமான பாடம் எது என்றும், விரும்புவதற்கான காரணங்களையும் விபரித்து எழுதுக.

3) உமது மனதைப் பாதித்த இயற்கை அழிவு பற்றியும், அதற்காக நீர் செய்த பங்களிப்புப் பற்றியும் உமது நண்பனுக்கு / நண்பிக்கு ஒரு கடிதம் எழுதுக.

4) பல நாட்டவர்களுடன் நீர் பழகுவதினால் நீர் பெறும் நன்மை தீமைகளை எழுதுக.

5) அடக்கமுடைமை (திருக்குறள்) என்ற பாடத்தின் மூலம் நீர் அறிந்த விடயங்களை எழுதுக.

6) மாணவர்கள் கைத்தொலைபேசி (Handy) பாவிப்பதனால் பெறும் நன்மை தீமைகளை எழுதுக.